DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1
SRIVAIKUNDAM(FAC)

| | |
|---|---|
| Case No | STC. 1214/2022 |
| Depostition of witness for | Prosecution wit. PW.1 |
| Name | திரு. தியாகச்செல்வன் |
| Father Name | நயினார் |
| Village | திருவைகுண்டம் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 63 |

**(எதிரி ஆஜரில்லை) எதிரிதரப்பில் வழக்கறிஞர்ஆஜர்)**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 27.06.2025

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

1. எனக்கும்எதிரிக்கும் எத்தனை காலமாக பழக்கம் என்றால்நான்கு ஐந்து வருட காலமாக பழக்கம்.
2. வழக்கு தொகைக்கு முன்பு எதிரி என்னுடன் வரவு செலவு கணக்கு வைத்துள்ளாரா என்றால் இல்லை.
3. எதிரியின் குடும்ப விவரம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது.
4.நான் வருமான வரி செலுத்தி வருகிறேனாஎன்றால் இல்லை.
5. பொதுவாக ரூபாய் 20,000/—த்திற்கு மேற்பட்ட பணபரிமாற்றம் செய்வதற்கு வங்கிமூலமாகதான் பணம் பரிமாற்றம் செய்யப்படவேண்டும் என்று சொன்னால் எனக்கு தெரியாது.
6. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயதொழில் செய்கிறேன்.
7. எவ்வளவு விஸ்தீரண நிலம் உள்ளது என்று கேட்டால் 3 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் என்ன, என்ன பயிர் இடுகிறோம் என்றால் வாழை , நெல் பயிரிடுகிறோம்.

8. மேற்கண்ட விவசாயத்தின் மூலமாக எனக்கு ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் வரும்அ என்று கேட்டால் ரூபாய் 3 லட்சம் வருமானம் வரும்.
9. நான் வட்டிக்கு பணம் கொடுப்பதற்கு அரசிடம் இருந்து முன்னனி பெற்றுள்ளேனா என்றால் இல்லை.
10. நான் வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை. ஒருமாதத்தில் நான் அவருக்கு கொடுத்த பணத்தை திரும்ப தந்துவிடுவதாக கைமாற்றாகதான் என்னிடம் பணம் வாங்கினார்.
11. நான் பணத்தை எங்கு வைத்துபணம் கொடுத்தேன் என்ற விவரத்தை வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.
12. எதிரி காசோலையை எங்கு வைத்து கொடுத்தார் என்றவிவரத்தை மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.
13. பணத்தை கொடுக்கும் போது எதிரியிடம் இருந்து அவ்வாறு பணம் கொடுத்தற்கு ஆதரவாக ஒப்பந்த ஆவணம் வாங்கினேனா என்றால் காசோலை மட்டும்தான் கொடுத்தார்.
14. எதிரிக்கு நான் கொடுத்ததாக சொல்லும் ரூபாய்ய 2 லட்சத்தை எங்கிருந்து கொடுத்தேன் என்று கேட்டால் என்னுடைய வீட்டில் இருந்து எடுத்து கொடுத்தேன்.
15. நான் வங்கி கணக்கு வைத்துள்ளேனா என்றால் ஆம் வைத்துள்ளேன். அதில் வரவு செலவு கணக்குகள் தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறேன்.
16. வங்கிகணக்கு ஸ்டேட்மெண்டை வங்கியில் இருந்து சான்றாவணமாக பெற்றுத்தர இயலுமா என்றால் இயலும்.
17. எந்த வங்கியில் கணக்கு வைத்துள்ளேன் என்று கேட்டால் திருவைகுண்டம் கனரா வங்கியில் கணக்கு வைத்துள்ளேன். அதன் கணக்குஎண்.தற்போது ஞாபகம் இல்லை.
18. பொதுவாக அதக அளவில் பணம் இருந்தால் அதனை வங்கி கணக்கில் போட்டு அதிலிருந்து பணப்பரிமாற்றம் செய்யப்படும் என்றால் சரிதான்.
19. எதிரியின் தகப்பனார் பெயா தெரியுமாஎன்றால் ஞாபகம் இல்லை.
20. என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ. 1 வங்கி காசோலையில் காசோலை வைத்திருக்கும் வங்கி கணக்கு வைத்திருக்கும் நபரான பெயராக D. Alagar என பிரிண்ட் செய்யப்பட்டு அதற்கு மேற்புரமாக எதிரியின் கையெழுத்து P. அழகர் என கையெழுத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.
21. என்னிடம் காண்பிக்கப்படும் ம.சாஆ.1 காசோலையில் நிரப்பப்பட்ட பகுதகள் அனைத்தும் ஆங்கில எழுததுக்களில் நிரப்பப்பட்டும், கையெழுத்து பகுதி தமிழிலும் கையெபத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். **சாட்சி தானாக ம.சா.ஆ. 1 காசோலையில் நிரப்பபடவேண்டிய**

**பகுதிகளில் எதிரி நிரப்பி கொண்டு வந்தார் என்றும், கையெழுத்தினை என் முன்பும் கையெழுத்து செய்ததாக கூறுகிறார்.**

22. ம.சா.ஆ.1 காசோலையில் எழுதப்பட்டுள்ள விசயங்கள் மற்றும் கையெழுத்து செய்தது பின்னிட்டு என்னால் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

23. ம.சா.ஆ–1 காசோலையில் உள்ள கையெழுத்தின் மையின் வயதை கணிப்பதற்காக கார்பன் டெஸ்ட் அனுப்பினால்தான் உண்மை நிலவரம் தெரியவரும் என்று சொன்னால் சரியல்ல.

24. எதிரிக்கு நான் என் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பை எதிரி பெற்றுக் கொண்டாரா என்றால் அவர் அதை வாங்கவில்லை.

25. எதிரி சம்பவகாலத்திற்கு முன்பும் அதற்கு பின்பும், தற்போது வரை அதே முகவரியில்தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான்.

**(பகுதியாக ம.சா. 1 குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். எதிரிதரப்பு வேண்டுகோளின் பேரில் ம.சா.1 மேலும் குறுக்குவிசாரணை செய்வற்காக வேறு ஒரு தேதிக்கு வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது. )**

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

(ஓம்) G. ராமசங்கரன்

நீதித்துறை நடுவர் எண். 1
ஸ்ரீவைகுண்டம்.(மு.பொ)